செ.வெ.எண். 49/மார்ச்                                                                 தேதி : 22.03.2017

# டிஜிட்டல் இந்தியா விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.03.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மத்திய அரசு, மாநில அரசுடன் இணைந்து வலுவான பாரதத்தை உருவாக்கும் வகையில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தை ஒருங்கிணைத்து அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நாடு முழுவதும் டிஜிட்டல் இந்தியா குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாநில அரசுடன் இணைந்து பிரச்சார வாகனத்தை வடிவமைத்துள்ளது. பின்னர் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் "வங்கிகள், அஞ்சலகங்கள், பொதுமக்கள் சேவை மையங்கள் உள்ளிட்டவைகள் அனைத்தும் டிஜிட்டல் முறையில் சேவையாற்றி வருகிறது. பீம் என்ற செல்போனில் இயங்கும் செயலி விரைவாகவும், பாதுகாப்பாகவும் பணம் செலுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் தருமபுரி, பாலக்கோடு, காரிமங்கலம், பாப்பிரெட்டிப்பட்டி, நல்லம்பள்ளி, பென்னாகரம், அரூர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இந்த டிஜிட்டல் இந்தியா பிரச்சார வாகனம் சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட உள்ளது. குறிப்பாக இந்த பிரச்சாரக் குழுவில் உள்ள ஒரு மூத்த இசை கலைஞர் ஒரு சீப்பு மற்றும் சாதாரண பிளாஸ்டிக் பேப்பரை வைத்துக்கொண்டு இசை எழுப்புவது மற்றும் பொதுமக்கள் இதனை எளிமையான முறையில் புரிந்து கொள்ளும் வண்ணம் டிஜிட்டல் இந்தியா சேவை மையத்தின் விழிப்புணர்வை நேரில் பார்வையிட்டு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், கோட்டாட்சியர் திருமதி. கவிதா, முன்னோடி வங்கி மேலாளர்

திரு. முத்தரசு, மத்திய அரசின் தேசிய தகவலியல் அலுவலர் திரு.அ.இரகுபதி உட்பட பலர் உள்ளனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.